Woodlands Hotel

*796 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for State Labour be pleased to state—

(*a*) whether it is a fact that lockout has been declared by the Woodlands Hotel in Edward Elliots Road, Mylapore, Madras about August 1971 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் (அ) சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் நிர்வாகம் 3–8–1971 பிற்பகல் 1 மணியிலிருந்து கதவடைப்பு செய்தது.

(இ) என்னுடைய முயற்சியின் பலனாகத் தொழிலாளர் நலத்துறை ஆணையாளரது முன்னிலையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து உட்லண்ட்ஸ் ஓட்டல் 26–8–1971-ல் மீண்டும் திறக்கப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, வ்விதமாக உணவு விடுதிகளில் ஏற்படுகின்ற கதவடைப்புகள் இனிமே நடக்காமல் இருப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் [illegible] வ ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : தலைவரவர்களே, உடனடியாகக் கூடுமான அளவில் இரு தரப்பாரையும் கலந்து பேச, அதை நிவர்த்தி செய்வது என்ற முறையை அரசு கடைப்பிடித்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பொதுவாக ஹோட்டல் தொழிலாளர்கள், உட்லண்ட்ஸ் உள்பட, 6 மாதங்கள் பணியாற்றியவர்களை விலக்கி விடுவதாகவும், புதிதாக வேலைக்குச் சேர்ப்பதுமாகச் செய்கிறார்களே இப்படி நிரந்தரத் தன்மையில்லாமல் செய்கிறார்கள். அந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்ற முறையில் ராஜன் கமிட்டி சிபார்சு இருப்பதாக அறிகிறேன். ஆகவே, பல ஆண்டுகளாக வேலை செய்யும் தொழிலாளர்களை 6 மாதம் 6 மாதம் என்று செய்யும் இந்த ஹோட்டல்களின் பெயரிலேயே அரசு நடவடிக்கை எடுக்குமா ? அங்கே நல்ல முறையில் இன்ஸ்பெக்ட் செய்து என்னென்ன ஹோட்டல்களில் இம்மாதிரி செய்கிறார்கள் என்பதைப் பரிசிலனை செய்ய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : தலைவரவர்களே, ஹோட்டல் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் இந்தக்கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். இராஜன் கமிட்டி ரிப்போர்ட்டி அடிப்படையில் தக்க நடவடிக்கை

எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்